DEPOSITION OF WITNESS

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.I COURT, ERODE

C.C.No.126/2015

PROSECUTION WITNESS L.W.4/P.W.5

| | | | |
|---|---|---|---|
| பெயர் | சரவணன் | தகப்பனார் பெயர் | ராஜகோபால் |
| கிராமம் | ஆணைக்கல்பாளையம் | ஊர் | ஈரோடு |
| தொழில் | சென்ட்ரிங் | வயது | |

**2 ம் எதிரி ஆஜர். 1 ம் எதிரி ஆஜர் இல்லை. 1 ம் எதிரி சார்பில் கு.வி.மு.ச. பிரிவு - 317-ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டுள்ளது).**

Solemnly affirmed in accordance with the provisions of ACT X of 1873 of the day of 15.10.2025

**முதல் விசாரணை**

1) நான் தற்போது ஈரோடு, ஆணைக்கல்பாளையத்தில் குடியிருந்து வருகிறேன். சென்ட்ரிங் வேலை செய்து வருகிறேன்.

2) 06.01.2014 ம் தேதி, எதிரிகள் ஆனந்தன் மற்றும் செல்வம் இரண்டு பேரும் எனது அக்கா வீட்டில் கார வேலை செய்து முடித்துவிட்டு 6.00 மணிக்கு வீட்டுக்கு சென்றுவிட்டார்கள். பின்னிட்டு அடுத்த நாள் காலை எனது அக்கா பீரோ வைத்திருக்கும் தனி அறைக்கு சென்று பார்த்தபோது, பீரோவின் பூட்டு உடைக்கப்பட்டு இருந்தது. அதில் இருந்த 2 1/2 பவுன் தங்க நகை மற்றும் ரூ.10,000/- காணாமல் போயிருந்தது. நானும் எனது அக்கா மற்றும் பால மணிகண்டன் ஆகியோர் தாலுக்கா காவல்நிலையம் சென்று புகார் கொடுத்தோம். அப்போது எதிரிகள் பற்றி தகவல் தெரிந்து கொள்ள போலீசார் எங்கள் மூவரையும் ஜீப்பில் அழைத்துச் சென்றனர். அப்போது ஆணைக்கல்பாளையம் பஸ் ஸ்டாப் அருகே சென்றபோது, எங்களை பார்த்துவிட்டு ஓட முயற்சித்த எதிரி செல்வத்தை போலீசார் பிடித்து காவல்நிலையம் அழைத்துச் சென்று விசாரித்தனர். அப்போது எதிரி குற்றத்தை ஒப்புக் கொண்டு தன்னிடம் இருந்த ரூ.7000/- த்தை போலீசாரிடம் கொடுத்தார்.

VANJI NATHAN R

Digitally signed by VANJI NATHAN R
Date: 2025.10.15 17:51:23 +0530

என்னிடம் காண்பிக்கப்படும் பார்வை மகஜரிலுள்ள இரண்டாவது கையெழுத்து, கைப்பற்றுதல் மகஜரிலுள்ள இரண்டாவது கையெழுத்து மற்றும் எதிரி செல்வத்தின் ஒப்புதல் வாக்குமூலத்திலுள்ள இரண்டாவது கையெழுத்து என்னுடையது தான். (**பார்வை மகஜரிலுள்ள இரண்டாவது கையெழுத்து, கைப்பற்றுதல் மகஜரிலுள்ள இரண்டாவது கையெழுத்து மற்றும் எதிரி செல்வத்தின் ஒப்புதல் வாக்குமூலத்திலுள்ள இரண்டாவது கையெழுத்து அ.சா.ஆ.5 முதல் அ.சா.ஆ. 7 ஆக குறியீடு செய்யப்படுகிறது**) போலீசார் என்னை விசாரித்தனர்.

**அரசு தரப்பில் சாட்சி குவிமுச பிரிவு 161ன் கீழ் அளித்துள்ள வாக்குமூலத்திற்கு முரணாக சாட்சியமளிப்பதால் சாட்சியை பிறழ்சாட்சியாக அறிவிக்கக்கோரியும், குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரப்பட்டு, அனுமதியளிக்கப்பட்டதன்பேரில் செய்யப்பட்ட குறுக்கு விசாரணை:**

1) கடந்த 06.01.2014 ம் தேதி, இரவு எங்களது வீட்டில் களவு போனது சம்மந்தமாக போலீசார் சம்பவ இடத்தை பார்வையிட்டு, மாதிரி வரைபடம் வரைந்து தயார் செய்த பார்வை மகஜரில் என்னிடம் சாட்சி கையொப்பம் பெற்றார்களா என்றால் ஆமாம். பின்னிட்டு இவ்வழக்கில் சம்மந்தப்பட்ட எதிரிகளை தேடிச் செல்ல இருப்பதாகவும், என்னை உடனிருக்கும்படி கேட்டுக் கொண்டதன்பேரில் நான் அவர்களுடன் சென்றபோது, பகல் சுமார் 12.00 மணியளவில் ஆணைக்கல்பாளையம் பஸ் ஸ்டாப் அருகே வந்தபோது அங்கிருந்த எதிரி செல்வம் (எ) செல்லதுரை ஓட முயற்சித்த போது போலீசார் அவரை சுற்றி வளைத்து பிடித்து விசாரிக்க குற்றத்தை ஒப்புக் கொண்டாரா என்றால் ஆமாம். எதிரி செல்வத்தை கைது செய்து விசாரித்தபோது அவர் தானாக முன் வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை என் முன்னிலையில் போலீசார் பதிவு செய்து என்னிடம் சாட்சி கையொப்பம் பெற்றார்களா என்றால் காவல்நிலையத்தில் தான் கையொப்பம் வாங்கினார்கள். ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் தனது பாக்கெட்டில் இருந்த ரூ.7000/- த்தை எடுத்து எதிரி ஆஜர் செய்ததை கைப்பற்றுதல் மகஜர் தயார் செய்து

VANJI NATHAN R
Digitally signed by VANJI NATHAN R
Date: 2025.10.15 17:51:29 +0530

கைப்பற்றி என்னிடம் சாட்சி கையொப்பம் பெற்றார்களா என்றால் காவல்நிலையத்தில் தான் கையொப்பம் செய்தேன். மேற்படி விவரங்களை நீதிமன்றத்தில் முதல்முறையாக சாட்சியமளிப்பதால் ஏற்பட்ட பதற்றத்தின் காரணமாக கூறவில்லை என்றால் ஆமாம்.

**2 ம் எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை**

1) நான் எனது அம்மா கண்ணம்மாள், அண்ணன் ஐயப்பன், அக்கா வெண்ணிலா ஆகியோர் இரங்கம்பாளையம் காவல்நிலையத்திற்கு சென்றோம் என்றால் ஆமாம், தேதி ஞாபகம் இல்லை. காவல்நிலையத்தில் போலீசார் சில பேப்பரில் எங்களிடம் கையொப்பம் வாங்கினார்கள் என்றால் ஆமாம். அதில் என்ன எழுதப்பட்டிருந்தது என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் ஆமாம். சம்பவம் நடந்து ஒரு வாரம் கழித்து காவல்நிலையத்திற்கு சென்றோமா என்றால் இல்லை, 2 - 3 நாட்களுக்குள் சென்றோம். புகார் அளித்து ஒரு மாதம் கழித்து தான் போலீசார் ரூ.7000/-த்தை மீட்டார்களா என்றால் இல்லை, ஒரு வாரத்திற்குள் பணத்தை போலீசார் கைப்பற்றினார்கள். யார் பணத்தை திருடினார்கள் என தெரியுமா என்றால் செல்வம் தான் திருடினார். திருடியதை நான் பார்த்தேனா என்றால் இல்லை, சந்தேகத்தின் பேரில் போலீசாரிடம் கூறினோம் அவர்கள் விசாரித்து எதிரிகள் திருடியதாக சொன்னார்கள். எதிரி செல்வம் எனது அக்கா வீட்டில் வேலை செய்யவில்லை என்றால் சரியல்ல. போலீசார் சொல்லிக் கொடுத்ததன் பேரில் நான் சாட்சியமளிக்கிறேன் என்றாலும், சாட்சி சொன்னால் தான் ரூ.7000/- பணம் கிடைக்கும் என்று சொன்னதால் தான் பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. அ.சா.1 முதல் அ.சா.3 வரை உள்ள சாட்சிகள் எதிரிகளை தெரியாது என்று சொல்லியுள்ள நிலையில் நீதிமன்றத்தில் வந்து பணம் பெறுவதற்காக எதிரிகளை தெரியும் என பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**2 ம் எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை 1 ம் எதிரி தரப்பில் ஏற்றுக்கொள்ளப்பட்டது.**

Taken Down by Before Me and Dictated By Me and Typed By the Typist in Open Court Read Over Interpreted on the witness in the presence of the accused/accused pleader and Admitted by the witness to be correct.

VANJI NATHAN R
Digitally signed by VANJI NATHAN R Date: 2025.10.15 17:01:34 +05'30'

Judicial Magistrate No.I,

Erode.